## ஆகஸ்ட் 4

**மனன வசனம்**

**அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (என்றான்). அப் 10:34,35.**

**ஆராய்ச்சிக்கு**

*அப் 9:32-43;*

*அப் 10:9-16;*

*எபே 2:11-19;*

*அப் 11:1-26;*

*அப் 12:1-18.*

ஆகஸ்ட் 4 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

### பாடம் 6

# பேதுருவின் ஊழியம்



பவுல் தர்சுவுக்குச் சென்றுவிடுகிறார்; தொடர்ந்து, கிறிஸ்தவ சபையின் ஆரம்ப நாட்களில் பேதுரு ஆற்றின பங்குபற்றி மீண்டும் லூக்கா சொல்லத் துவங்குகிறார். யூதேயாவிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சென்று, நற்செய்தியை பேதுரு பிரசங்கித்து வந்தார். பேதுரு செய்த இரண்டு அற்புதங்கள்பற்றி அப்போஸ்தலரில் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. அதாவது, ஐனேயா குணமாக்கப்படுதல், தபீத்தாள் எனும் தொற்காள் உயிரோடு எழுப்பப்படுதல். அதைத் தொடர்ந்து 10ஆம் அதிகாரத்தில் கொர்நேலியுவின் அனுபவம் சொல்லப்படுகிறது.

மனமாறிய புறஜாதியார்பற்றி அப்போஸ்தல சபையில் மிகுந்த சர்ச்சை உண்டாகியிருந்தது. கொர்நேலியு ஞானஸ்நானம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து கூறப்பட்ட கருத்துகள் எல்லாப் பிரச்சனைகளையும் சுமூகமாகத் தீர்க்காவிட்டாலும், நற்செய்தியின் ஆசீர்வாதங்கள் யூதர்களுக்குமட்டும் உரியவை அல்ல என்று பேதுருவும் மற்ற சகோதரர்களும் ஏற்றுக்கொள்வதற்கு ஆவியானவர் ஊற்றப்பட்ட நிகழ்வு உதவியாக இருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்தது போலவே, கொர்நேலியு வீட்டிலும் நிகழ்ந்ததால், யோசிக்கத் தொடங்கினார்கள். அந்தச் சமயத்தில், அந்தியோகியாவிலிருந்த சபை புறஜாதியாருக்கு சுவிசேஷம்சொல்லத் தொடங்கியிருந்தது.

ஏரோது ராஜா அப்போஸ்தலர்களுக்கு புதிதாக உபத்திரவம் தந்தான். சில காலம் நீடித்த அந்த உபத்திரவம்பற்றியும், பவுலின் உபத்திரவத்திற்குத் தப்பியிருந்த அப்போஸ்தலரில் இந்த உபத்திரவம் உண்டாக்கிய தாக்கம்பற்றியும் இவ்வாரம் ஆராய்வோம்.

*2018, ஆகஸ்ட் 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஆகஸ்ட் 5

## லித்தா, யோப்பாவில்

யூதேயாவின் கடலோரப் பகுதிகளில் பயணம்செய்து, அங்கிருந்த விசுவாசிகளை பேதுரு சந்தித்து வந்தார். அவர்களுக்கு உபதேசம்பண்ணுவதற்காக அவர் சென்றிருக்கவேண்டும். அப் 2:42. இயேசு செய்த அற்புதங்களைப் போல பேதுருவும் அங்கு அற்புதங்களைச் செய்யும்படி தேவன் வல்லமையாக அவரைப் பயன்படுத்தினார்.

**அப் 9:32–35 வசனங்களை வாசியுங்கள். லூக்கா 5:17–26இல் இயேசு செய்த அற்புதத்திற்கும் ஐனேயா குணமான சம்பவத்திற்குமுள்ள ஒற்றுமைகள் யாவை?**

சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ள அந்தச் சம்பவம், கப்பர்நகூமில் இயேசு ஒரு திமிர்வாதக்காரனைக் குணமாக்கினதை நினைவூட்டுகிறது. லூக் 5:17-26. படுக்கை குறித்த குறிப்பிலும்கூட ஒற்றுமை உள்ளது. அதைவிட முக்கியமானது, ஐனேயா குணமான சம்பவம் லித்தாவில் மட்டுமல்ல, கடலோர சமவெளிப்பகுதியான சாரோனிலும் தாக்கத்தை உண்டாக்கியிருந்தது. அற்புதம் நிகழ்ந்தது மெய்தானென்று அறிந்து, அங்கிருந்த அநேகர் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

**தபித்தாள் உயிரோடு எழுப்பப்பட்ட சம்பவத்தை அப் 9:36–43இல் வாசியுங்கள். அந்த அற்புதத்தின் சிறப்பு என்ன?**

தபீத்தாள் என்றால் அரமெய்க் மொழியில் 'மான்' என்று அர்த்தம்; அதற்கான கிரேக்க வார்த்தை தொற்காள். தானதருமங்கள் போன்ற கிறிஸ்தவ நற்கிரியைகளை தன் பகுதி மக்களுக்கு அதிகமாகச் செய்துவந்தாள். அவள் உயிரோடு எழுப்பப்பட்ட சம்பவமானது யவீருவின் மகளை இயேசு எழுப்பின சம்பவத்தை நினைவூட்டுகிறது. லூக்கா 8:41,42,49-56. பேதுருவும் அப்போது இயேசுவுடன் இருந்தார். இயேசு செய்ததுபோலவே, பேதுருவும் எல்லாரையும் அந்த அறையிலிருந்து வெளியே போகச் சொல்லுகிறார். மாற்கு 5:40. பிறகு முழங்காலிட்டு, ஜெபித்துவிட்டு, மரித்துக்கிடந்த பெண்ணைப் பார்த்து, ''தபீத்தாளே, எழுந்திரு'' என்கிறார். அப் 9:40.

அப்போஸ்தலர்கள் அநேக அற்புதங்களைச் செய்தார்கள்; அவர்கள்மூலம் தேவன் மகத்தான கிரியைகளைச் செய்தார். அப் 5:12. இயேசு செய்ததுபோல அவர்கள் அற்புதங்களைச் செய்ததிலுள்ள தாற்பரியம் என்ன? யார் மூலம் தேவன் கிரியை செய்கிறார் என்பது அல்ல, எவ்வளவு தூரம் அவர் தன்னை தேவனிடம் அர்ப்பணித்திருக்கிறார் என்பதை அன்றுள்ள சபைக்கும், இன்று நமக்கும் நினைவூட்டுவதே நோக்கம். யோவான் 14:12. நற்செய்தியின் நோக்கத்திற்காக தேவன் நம்மைப் பயன்படுத்த நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணித்தால் மகத்தான கிரியைகள் நடைபெறும். தபீத்தாளை பேதுரு உயிரோடு எழுப்பினபோது, யோப்பாவிலும் அநேகர் கர்த்தரை ஏற்றுக்கொண்டார்கள். அப் 9:42.

அற்புதத்தைக் கண்ணாரக் கண்டால்தான் தங்களால் விசுவாசிக்க முடியுமென சிலர் நினைக்கிறார்கள். அற்புதங்கள்மூலம் சிலர் மெய்யான விசுவாசத்திற்கு வழிநடத்தப்படுவது உண்மைதான்; ஆனால், அற்புதங்களைக் கண்டும் அநேகர் விசுவாசியாமலிருந்த சம்பவங்கள் வேதாகமத்தில் உள்ளன. அப்படியானால், எதன் அடிப்படையில் நம் விசுவாசம் இருக்கவேண்டும்?

# கொர்நேலியுவின் வீட்டில்

யோப்பாவில் தோல் பதனிடுகிற வியாபாரம் செய்துவந்த சீமோன் என்பவரது வீட்டில் பேதுரு தங்கியிருந்தார். அப் 9:43. யோப்பாவிலிருந்து 40 கி.மீ. தொலைவிலிருந்த செசரியாவில் கொர்நேலியு என்கிற ஒரு நூற்றுக்கதிபதி வாழ்ந்து வந்தார். அவரும் அவரது குடும்பத்தாரும் பக்தியோடு தேவனைத் தொழுதுவந்தார்கள்; ஆனாலும், முறைப்படி யூதேய மார்க்கத்தைத் தழுவவில்லை. அதாவது கொர்நேலியு, விருத்தசேதனம் பண்ணப்படாத ஒரு புறஜாதியான். கொர்நேலியுக்கு தேவன் ஒரு தரிசனம் கொடுத்தார்; யோப்பாவிலிருந்த பேதுருவை அழைப்பிக்கும்படி அதில் கட்டளையிட்டார். அப் 10:1-8.

**பேதுருவுக்குக் காட்டப்பட்ட தரிசனம் என்ன? அதன் அர்த்தம்பற்றி என்ன புரிந்துகொண்டார்? அப் 10:9–16,28,34,35.**

உணவுபற்றியல்ல, மக்களைப்பற்றிக் கொடுக்கப்பட்ட தரிசனம் அது. மத்தியான வேளை; பேதுரு பசியில் இருந்தார். அவற்றை அடித்துப் புசிக்கும்படி அவரிடம் சொல்லப்பட்டது. தீட்டுள்ள பிராணிகள், தீட்டில்லாத பிராணிகள் என்கிற வேறுபாடு அகற்றப்பட்டது என்று சொல்வதற்காக அல்ல, நற்செய்தி எல்லாருக்கும் உரியது என்பதை பேதுருவுக்கு உணர்த்துவதற்காகவே தேவன் அந்தத் தரிசனத்தைக் கொடுத்தார்.

புறஜாதியார்பற்றி பேதுருவிடம் காணப்பட்ட தவறான மனநிலையை அகற்றுவதற்காக அந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டது. கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்று, அந்நியோந்நியமாக இருந்தால், தான் தீட்டுப்பட்டு தேவாலயத்தில் தொழுதுகொள்ளும் தகுதியையும் தேவனிடம் செல்கிற தகுதியையும் இழந்து விடுவேன் என்று பேதுரு கருதியிருப்பார். யூதேயாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் இருந்த முதல் நூற்றாண்டு யூதர்கள் விருத்தசேதனம் பண்ணப்படாத புறஜாதியார்களிடம் தொடர்பு வைத்துக்கொள்வதில்லை.

இஸ்ரவேல் தேசத்திற்குள் புறஜாதியாரைச் சேர்ப்பதை தேவன் விரும்பவில்லை என்று அப்போது நினைத்தார்கள்; ஆனால் இஸ்ரவேல் தேசம் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு அது முற்றிலும் முரணானதாக இருந்தது. ஏனென்றால், **மெய்யான தேவனைப்பற்றி உலகத்தாருக்கு அறிவிக்கவே இஸ்ரவேல் தேசம் ஏற்படுத்தப்பட்டது.**

விருத்தசேதனமானது ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாக இருந்தது; எனவே விருத்தசேதனம் பண்ணப்படாத புறஜாதியாரை ஒதுக்கினார்கள்; அவமரியாதையாக நடத்தினார்கள். விருத்தசேதனம்பண்ணி, யூதர்களாக மாறினாலொழிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் எதையும் பெறமுடியாதென நினைத்தார்கள். ஆனால் இயேசு ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்தார் என்பதற்கு முரணான கருத்து இது. ஆரம்பக்கால விசுவாசிகள் போகப்போக இதைப் புரிந்துகொண்டார்கள்.

நற்செய்தி எல்லாருக்கும் உரியது என்பதை தீத்து 2:11; கலா 3:26–28; எபே 2:11–19 ஆகிய வசனங்கள் எவ்வாறு வலியுறுத்துகின்றன? இனப்பாகுபாட்டை முன்னிட்டு யார்மேலாவது விரோதப் போக்கை கிறிஸ்தவர்கள் கையாளுவது ஏன் தவறானது?

## செவ்வாய், ஆகஸ்ட் 7

# ஆவியின் வரம்

ஆரம்பக் காலச் சபை வரலாற்றின் ஒரு முக்கிய தருணம்பற்றி அப் 10: 44-48 பேசுகிறது. அப்போஸ்தலர்களில் ஒருவர் விருத்தசேதனம் பண்ணப் படாத புறஜாதியாருக்கு நற்செய்தியைப் பிரசங்கித்த முதல் சம்பவம் இது. கிரேக்க மொழி பேசின யூதர்கள்தாம் புறஜாதியாரை தங்கள் சபைகளில் ஏற்றுக் கொண்டார்கள்; அப்போஸ்தலர்களும் யூதவிசுவாசிகளும் ஏற்றுக்கொள்ள வில்லை. இயேசு இஸ்ரவேலின் மேசியா என்பதால், அருகிலும் தூரத்திலும் உள்ள யூதர்களுக்குமட்டுமே அவரை அறிவிக்க விரும்பினார்கள். புற ஜாதி யார் முதலில் மனமாறி யூதமார்க்கத்தில் இணையவேண்டும்; அப்போதுதான் விசுவாசக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக ஆகலாமென நினைத்தார்கள். அதாவது, யூதர்களாக மாறினால்மட்டுமே புறஜாதியார் கிறிஸ்தவர்களாக மாற முடியுமென கருதினார்கள். இது ஆரம்பக்கால யூத விசுவாசிகளிடமிருந்து அகற்றப்பட வேண்டியிருந்த ஓர் எண்ணமாக இருந்தது.

இந்த எண்ணம் தவறானது. தேவனிடம் பட்சபாதம் கிடையாது. இரட் சிப்பைப் பொறுத்தவரையில் யூதர்களும் புறஜாதியாரும் தேவனுக்குமுன் சம மானவர்கள் என்பதற்கு கொர்நேலியுவும் அவருடைய வீட்டாரும் அந்நிய பாஷையின் வரத்தைப் பெற்ற சம்பவம் ஓர் அடையாளமாக இருந்தது.

**சிசெரியாவில் பேதுருவுக்கு உண்டான அனுபவத்தைக் கேட்டதும் எருசலேமி லிருந்த சபையார் செய்தது என்ன? அப் 11:1-18.**

புறஜாதியாரைப்பற்றி நீண்டகாலமாக யூதர்களில் வேரூன்றிவிட்ட தப்பெண ணத்தால், எருசலேமிலிருந்த விசுவாசிகள், விருத்தசேதனமில்லாதவர்களோடு பேதுரு போஜனம்பண்ணினது தவறு என்று விமர்சித்தார்கள். கொர்நேலியுவும் அவருடைய குடும்பத்தாரும் மனமாறியதைவிட, யூத சடங்காச்சாரங்களைப் பெரிதாக எண்ணினார்கள். சபையில் இத்தகைய சம்பவங்களை அனுமதிப்பது இஸ்ரவேலர் தங்கள் விசுவாசத்தைத் துறந்துவிட்டதுபோலக் காண்பித்துவிடு மென நினைத்திருக்கலாம். தேவனுடைய தயவை இழக்கவும், சக யூதர்கள் ஸ்தேவானைக் கொல்வதற்கு காரணமாயிருந்த அதே குற்றச்சாட்டுகளுக்கு தாங்களும் ஆளாக நேரிடுமென்றும் கருதியிருக்கலாம்.

“முற்றிலும் ஒரு புதிய கட்டப் பணியை கிறிஸ்துவின் சபை செய்வதற்கான நேரம் வந்திருந்தது. மனமாறிய யூதர்கள் பலர் புறஜாதியாருக்கு அடைத்திருந்த கதவு திறக்கப்படுவதற்கான நேரம் வந்தது. நற்செய்தியை ஏற்றுக்கொண்ட புறஜாதியார், விருத்தசேதன சடங்கின் அவசியமின்றி, யூத சீடர்களுக்கு சம மாகக் கருதப்படவேண்டிய நேரம் வந்தது” - *EGW, AA, p 136.*

பெந்தெகொஸ்தே நாளைப் போலவே இப்போதும், இதற்குமுன் தாங்கள் அறிந்திராத மொழிகளில் பேசினார்கள்; உணர்ச்சிப்பெருக்கால் வருகிற பாஷை களில், பரலோகப் பாஷைகளில் பேசவில்லை. இப்போது வேறொரு நோக்கத் திற்காக அந்நிய பாஷையின் வரம் கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் உலகளாவிய ஊழியப்பணியைச்செய்யும்படிக்கும், புறஜாதியார்மேலும் தேவன் கிருபையோடிருக்கிறார் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தும்படிக்கும் கொர்நேலியுவுக்கு அந்த வரம் கொடுக்கப்பட்டது.

## அந்தியோகியாவிலிருந்த சபை

பேதுருவின் ஊழியம்பற்றிச் சொல்லிவந்தார் லூக்கா; கொர்நேலியுவின் மனமாற்றம் தந்த ஊக்கத்தால், புறஜாதியார் மத்தியில் நற்செய்தி முதலாவது பரவத் தொடங்கியதுபற்றிப் பேச ஆரம்பிக்கிறார்.

**எருசலேமிலிருந்து சிலர் அந்தியோகியாவில் தஞ்சம்புக வந்தபோது என்ன நிகழ்ந்தது? அப் 11:19–26.**

அப் 11இன் இந்தப் பகுதியானது, அப் 8இல் பவுலால் முன்பு ஏற்பட்டிருந்த உபத்திரவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. யூதேயாவிலும் பிற பகுதிகளிலும் அந்த உபத்திரவம் பரவிவந்த சமயத்தில், எருசலேமிலிருந்து வெளியேறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட கிரேக்க மொழி பேசின யூதர்கள் சிலர், யூதேயாவின் எல்லைகளுக்கும் அப்பால் நற்செய்தியைப் பரப்பிக்கொண்டிருந்தார்கள்.

சிரியாவிலிருந்த மாநகரமாகிய அந்நியோகியாபற்றி லூக்கா குறிப்பிடு கிறார்; அங்குத் தஞ்சமடைய வந்தவர்கள் தங்கள் சக யூதர்களுக்கும், கிரேக்க மொழி பேசினவர்களுக்கும் நற்செய்தியைக் கூறினார்கள்; அங்கு அநேகர் கர்த்தரை விசுவாசித்தார்கள். அப் 1:8இல் இயேசு கொடுத்த ஊழியக் கட்டளை யானது கிரேக்க மொழி பேசின யூத கிறிஸ்தவர்கள் மூலம் அப்போது நிறைவேறி னதை உணர்ந்தார்கள். புறஜாதியார்மத்தியில் முதன்முதலாக ஊழியப்பணியை ஸ்தாபித்தவர்கள் இவர்கள்தாம்.

அந்தியோகியா சபையின் வெற்றியைத் தொடர்ந்து, அங்குள்ள நிலை மையை அறிந்துவர எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் பர்னபாவை அங்கு அனுப்புகிறார்கள். நற்செய்தியைச் சொல்வதற்கு அருமையான வாய்ப்புகள் அங்கு நிலவினதைக் கண்ட பர்னபா, அப்பணியில் பவுல் மிகவும் உதவியாக இருக்கக்கூடுமென்று, தர்சுவுக்குச் சென்று பவுலை அழைத்துவருகிறார்.

பர்னபா செய்தது சரிதான். பவுலும் அவரும் சேர்ந்து ஊழியம்செய்த அந்த வருடத்தில் பெருந்திரளான புறஜாதியார் நற்செய்தியை அறிந்துகொண்டார்கள். அங்குள்ள விசுவாசிகள்தாம் முதன்முதலாக **‘கிறிஸ்தவர்கள்’** என்று அழைக்கப்பட் டார்களென்றால், எவ்வளவு உற்சாகத்துடன் இயேசு கிறிஸ்துவைப்பற்றி அவர் கள் அறிவித்திருக்க வேண்டும்! அப் 11:26. ‘என்கிற பேர் வழங்கிற்று’ என்று சொல்லப்படுவதால், வெளியே இருந்தவர்கள் அப்படி அவர்களை அழைத்தி ருக்கிறார்கள்; ஏளனமாகக்கூட அப்படிச் சொல்லியிருக்கலாம். ஏனெனில், விசுவாசிகள் தங்களை ***‘சகோதரர்’, ‘சீஷர்கள்’, ‘பரிசுத்தவான்கள்’*** என்றே பெரும்பாலும் அழைத்தார்கள். அப் 1:16; 6:1; 9:13. அப்போஸ்தலர் புத்தகம் எழுதப்பட்ட சமயத்தில் **‘கிறிஸ்தவன்’** என்கிற பெயர் வழக்கத்தில் வந்துவிட்டது. அப் 26:28. லூக்காவும் அதை அங்கீகரிக்கிறார். **‘கிறிஸ்தவன்’** என்றால் **கிறிஸ்துவை பின்பற்று பவன்**, அல்லது **கிறிஸ்துமேல் பற்றுள்ளவன்** என்று அர்த்தம்.

‘கிறிஸ்தவன்’ என்று அழைக்கப்படுவதை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்? மெய்யான கிறிஸ் தவனுக்குரிய வாழ்க்கை உங்களில் காணப்படுகிறதா? அதாவது, பரலோகத்திற்கடுத்த விஷயங் களில், கிறிஸ்தவர்களாக இல்லாதவர்களைவிட எவ்வளவுக்கு வித்தியாசமாக வாழ்கிறீர்கள்?

**வியாழன், ஆகஸ்ட் 9**

## ஏரோது ராஜாவால் உண்டான உபத்திரவம்

செபதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாகிய யாக்கோபை (மாற்கு 1:19) ஏரோது ராஜா யூதேயாவில் கொலைசெய்கிறான். பேதுருவையும் அவ்வாறே கொலைசெய்ய எண்ணுகிறான்.

**ஆரம்பக்காலச் சபை சந்தித்த சவால்கள்பற்றி அப் 12:1–4 சொல்வது என்ன?**

______________________________________________________________________

______________________________________________________________________

மகா ஏரோதுவின் (மத் 2:1) பேரனான முதலாம் அகிரிப்பா ராஜாதான் இந்த ஏரோது ராஜா. கி.பி. 40-44 வரை யூதேயாவை அரசாண்டான். அவன் பக்திமான் போல தன்னைக் காட்டிக்கொண்டதால், யூத குடிகள் மத்தியில், குறிப்பாக பரி சேயர்மத்தியில் பிரபலமாகியிருந்தான். அப்போஸ்தலர்கள் சிலரைத் தண்டித்து, அதன்மூலம் யூதர்களின் ஆதரவைச் சம்பாதிக்கமுயன்றான்; இந்த அராஜகப் போக்கை வேறு சில ஆதாரங்கள்மூலமும் அறியமுடிகிறது.

யாக்கோபைக் கொலைசெய்ததும், அகிரிப்பா எதிர்பார்த்தபடி நடந்தது. எனவே, பேதுருவையும் கொல்லத் திட்டமிட்டான். பேதுருவைக் கைதுசெய்து, இரவில் நான்கு முறை மாறுகிற, நான்கு பிரிவு வீரர்களிடம் ஒப்படைத்தான். பேதுருவோடு எப்போதும் நான்கு வீரர்கள் இருப்பார்கள்; பேதுருவுக்கு இரு பக்கத்திலும் உள்ள இரு வீரர்களோடு சங்கிலியால்பிணைக்கப்பட்டிருப்பார்; மேலும், வாசலில் இரண்டு வீரர்கள் காவலுக்கு நிற்பார்கள். இதற்குமுன் பேதுருவும் யோவானும் ஒருமுறை சிறையிலிருந்து தப்பித்திருக்கிறார்கள். அப் 5:17-20. அதைத் தடுக்கவே இந்தப் பலத்த பாதுகாப்பு.

**பேதுருவுக்காக சகோதரர்கள் ஜெபித்ததும் நிகழ்ந்தது என்ன? அப் 12:5–18.**

______________________________________________________________________

______________________________________________________________________

பேதுருவை விசாரித்து, கொலைசெய்ய அகிரிப்பா திட்டமிட்டிருந்த தினத்திற்கு முந்தின நாள் இரவில், தேவதூதன் ஒருவன் பேதுருவை அற்புதமாக விடுவித்தான். பின்பு, சிசெரியாவில் அக்கிரிப்பா செத்துப்போனான். அப் 12: 20-23. அவன்செத்ததற்கானகாரணம்வயிற்றுப்பைவீக்கமா,வயிற்றுப்புண்ணா, விஷமா என்று அறிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், தேவனுடைய தண்டனைத் தீர்ப்பினால் அவன் செத்ததாக லூக்கா தெளிவாகக் கூறுகிறார்.

யாக்கோபு கொல்லப்பட்டார். பேதுரு விடுவிக்கப்பட்டார். ஏரோது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆளானான். சில விஷயங்கள் நியாயமானவை போலவும், சில நியாயமற்றவை போலவும் தோன்று கின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைக்கப்போவதில்லை என்பதையும், நமக்குப் புரியாத விஷயங்களில் நாம் விசுவாசத்தோடு வாழவேண்டும் என்பதையும் இது எவ்வாறு நமக்குக் கற்றுத்தருகிறது?

## மேலும் படிக்க:

"பரலோகத் தூதர்களின் பணிவிடைபற்றிய உதாரணமாக, கொர்நேலியுவும் அவனோடு சேர்ந்தவர்களும் மனமாறினதுபற்றி அப்போஸ்தலர் பத்தாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்த அதிகாரங்களில் [8-10] விசேஷித்த கவனம்செலுத்தி, வாசிக்கவேண்டும். ஆத்தும ஆதாய ஊழியத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவனிடம் நாம் நினைப்பதைவிட மிக அருகில் பரலோகம் வருகிறது; இதை அவற்றில் நாம் காண்கிறோம். ஒவ்வொரு மனிதனையும் தேவன் எவ்வாறு பார்க்கிறாரென அறியவேண்டும்; பூமியில் இயேசுவின் ஊழியத்தைச் செய்துமுடிக்கிற ஒரு கருவியென தன் சகமனிதனை ஒவ்வொருவரும் நடத்தவேண்டும்." - *EGW, 6SDABC, p 1059.*

பாடுகளும் இரத்தசாட்சியாக மரிப்பதும் சபையில் இருந்தாலும்கூட, சபை ஜெபிக்கும்போது, தேவ நோக்கம் நிறைவேறுகிறது, அவருடைய சத்துருக்கள் ஒன்றுமில்லாமல் போகிறார்கள்; நற்செய்திக்கு முற்றிலும் வெற்றியுண்டு என்பதை லூக்கா மெய்யாகவே நம்பினார்; தேவ வார்த்தை கட்டப்பட்டிராவிட்டாலும், தேவ ஊழியர்கள் கட்டப்பட்டு, பாடுபடவேண்டியிருக்கலாம் என்பதை உணர்ந்திருந்தார்.

### கலந்துரையாடக் கேள்விகள்

*1.* *'அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்' என்று கொர்நேலியுபற்றிச் சொல்லப்படுகிறது. அப் 10:2. கொர்நேலியுவைச் சந்திக்க பேதுரு வருவதற்கு முன்னரே தேவ ஆவியானவர் அவருக்குள் கிரியைசெய்து வந்தார். அவர் பக்தியான வாழ்க்கை வாழ்ந்தது, நற்செய்தி தனக்கு அறிவிக்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பை தேவனுக்குக் கொடுத்தாரா? இதில் நமக்குள்ள பாடம் என்ன?*

*2.* *மீண்டும் ஒரு முறை திங்கட்கிழமையின் கடைசிக் கேள்வியைத் தியானியுங்கள். கிறிஸ்தவர்களில் காணப்படக்கூடாத இனப் பாகுபாட்டை உங்களில் வளர்க்கக் கூடிய ஏதாவது கலாச்சார, சமுதாய, அரசியல் காரணிகள் உங்கள் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா? நம் கலாச்சாரப் பேதங்களையும் பின்னணியையும் ஒதுக்கிவிட்டு, கிறிஸ்தவர்களாக வாழ நாம் என்ன செய்யலாம்?*

*3.* *பவுல் கொடுத்த உபத்திரவங்களால் பாதிப்பு ஏற்பட்டாலும், அது நன்மையாக முடிந்தது; அந்தியோகியாவில் தஞ்சம்புக வந்தவர்கள் யூதர்களுக்கும் கிரேக்க மொழி பேசுபவர்களுக்கும் பிரசங்கித்தார்கள். உங்களுக்கு ஏற்பட்ட வேதனையான அனுபவத்தை தேவன் ஆசீர்வாதமாக மாற்றினதுபற்றி வகுப்பில் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

*4.* *இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த சீடர்களுள் யாக்கோபும் ஒருவர் (மாற்கு 5:37; 9:2; 14:33); ஆனால் பன்னிருவரில் இரத்தச்சாட்சியாக முதலில் மரித்தவர் அவர்தான். உண்மையுள்ளவர்களாக இருந்தும், அநியாயமாகப் பாடுபட்ட வேறு என்ன சம்பவங்கள் வேதாகமத்தில் உள்ளன? பாடுகள்பற்றி இந்தச் சம்பவங்களிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?*